# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 43/2021, நாள்.11.03.2026

### DW3- திரு. ஆறுமுகம், த/பெ. திரு.சோமு

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் டீக்கடை வைத்துள்ளேன். எங்கு வைத்துள்ளேன் என்றால் தங்கமோகன் செந்தில்குமார் கடையில் வைத்துள்ளேன். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று . பிறந்ததேதி தெரியுமா என்றால் தெரியும். திருமண தேதி தெரியுமா என்றால் தெரியாது. வாதி சாந்தியை தெரியுமா என்றால் தெரியும். அவர் அப்பாவை தெரியுமா என்றால் தெரியும். எந்த ஆண்டு அங்கு டீக்கடை வைத்தேன் என்றால் 1995. வழக்கிடை சொத்து மாடிகட்டிடமாக உள்ளது என்றால் ஆமாம். நான் தற்போது கடைவைத்திருக்கவில்லை என்றால் மாடிகடையில் தொடர்கிறேன். 1995லிருந்து கூரைகொட்டகை என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். ரூ.1,15,000 யார் யாரிடம் வாங்கியது என்றால் பெரியசாமி என்னிடம் வாங்கினார். எந்த தேதியில் செட்டில் பண்ணார் என்றால் 2000 ஆண்டில் தங்கமோகனும் செந்தில்குமாரும் கொடுத்தார்கள். அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உறவு இல்லை என்றால் ஆமாம். ரத்தினத்தம்மாள், கோவிந்தசாமி பஞ்சாயத்து நடந்த விபரம் நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். வழக்கிடை சொத்து சம்மந்தமாக வாய்மொழியாக பாகம் பேசிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் செந்தில்குமார், பாகம் நடந்ததாக சொல்கிறேனே அது எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வாய்மொழியாக கேட்ட செய்தி என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகளுக்கு ரோட்டு ஓரம் ஒதுக்கபட்டதாக சொல்வதும் செவி வழி செய்திதான் என்றால் ஆமாம். நான் டீ மாஸ்டர் என்றால் ஆமாம் ஓனரும் நான்தான். நான் பொருளாதாரத்தில் கஷ்டபடுவதால் 2500 வாடகை கொடுப்பதாக சொல்லி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாடகை ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது என்றால் 2003. 2003இல் ஒப்பந்தத்தில எவ்வளவு வாடகை முன்பணம் எவ்வளவு வாடகை என்றால் ரூ.20000 முன்பணம், வாடகை அப்போது ரூ.600. வழக்கு நடக்கும் கடை முக்கியமான பகுதி என்றால் ஆமாம். அந்த இடத்தில் ரூ.10000, 15000 வாடகை என்றால் கொடுக்கமுடியவில்லை என்று காலி செய்துபோய்விட்டார்கள். மாதம் கடைக்கு ரூ.10000 வாடகை நிர்ணயம் செய்யும் அளவிற்கு முக்கிய பகுதி என்றால் ஆமாம். தங்கமோகன், அவர் தம்பி என்னை சாட்சி சொல்ல வரச்சொன்னார்கள் என்றால் ஆமாம். நான் இந்த வழக்கில் தரப்பினர் என்றால் ஆமாம். நான்

வாடகைதாரர் என்பதால் வாடகை வைப்பீடு செய்யவேண்டும் என்று கட்சி செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். நான் வாடகை செலுத்தாமல் வழக்கறிஞர் வைத்து முன்னிலையாகாமல் ஒருதலைபட்சமாகிவிட்டேன் என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகள் கேட்டு கொண்டதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். வாதிகளுக்கு வாடகை பணம் கிடைக்ககூடாது என்பதற்காக 2500 என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.11 17:29:31 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**